1990 மே 12] [டாக்டர் மு. கருணாநிதி]

மாண்புமிகு துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் ஒரு அறக்கட்டளையிலே இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அனுப்பியிருப்பதாக நேற்றைய தினம் தகவல் தந்துள்ளார். இந்தப் பணம் வந்து சேர்ந்ததா, அளிக்கப்பட்டு விட்டதா என்று எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். விரைவிலே அது வந்து சேரும், வந்து சேர்ந்த உடன் அந்தப் பணம் அளிக்கப்படும்.

அதைப்போலவே ஆந்திர மாநில முதலமைச்சரும் ஒரு நல்ல உள்ளத்தை, நல்ல எண்ணத்தை பரிமாறிக்கொள்ளக் கூடிய வகையிலே 10 லட்சம் ரூபாய் இங்கே நம்முடைய நிவாரண நிதிக்காக அவர்கள் நேற்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அவருக்கும், துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) வனத் துறை அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை தமிழ்நாடு பாரஸ்டர்கள் சங்கம் இங்கே தொடர் உண்ணாவிரதம் இருந்தது. அதேபோல் தமிழ்நாடு கானியல் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 78 பேர்——பாரஸ்ட்டு பயிற்சிக் கல்லூரியில் இருக்கிற பயிற்சியாளர்கள் 78 பேர் கடந்த ஒரு வார காலமாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய 6 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அதிலே 24 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுடைய நிலைமை மோசமாக இருப்பதாக எனக்கு இன்று காலையில் கூட தந்தி வந்திருக்கிறது. அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில் மிகவும் நியாயமான கோரிக்கைகள் அதிலே அடங்கி இருப்பதாக நானும் நினைக்கிறேன். உதாரணமாக ஒரே கல்வித் தகுதி இருந்தாலும் கூட அவர்களுக்கும் ரேஞ்சர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்திலே 800 ரூபாய் வேறுபாடு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் பொதுவாக பதவி உயர்வு என்று வந்தால் யாருக்கும் 3 பதவி உயர்வுகள் ஒரு அரசுப் பணியில் இருக்கின்ற நேரத்தில் கிட்டும். இவர்களைப் பொறுத்தவரையில் பதவி உயர்வுக்கே வழி இல்லாமல் 'once a mortgage always a mortgage' என்பதைப் போல, 'once a Forester always a Forester' என்கிற நிலைமை இவர்களுக்கு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதிலே வந்தவர்களிலே சில பேர் 27 ஆண்டுக் காலம், 28 ஆண்டுக் காலம் பணியாற்றியும் கூட அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதே போல் ரிஸ்க் அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். வீட்டு அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். நியாயமான பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராடிக்கொண்டு வருகிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 மே 12

சென்ற ஆண்டு கானியல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியாளர்களுக்கு பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற அமைச்சர் அவர்கள் அங்கே உறுதிமொழி அளித்ததாகவும் அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக வேறு சம்பள விகிதங்களில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுமானால்—எந்த இலாக்காவாக இருந்தாலும்—சம்பளக் கமிஷன் பரிந்துரைக்குமேல் மாற்றம் செய்யப்படுமானால் நான் உங்களுக்குப் பரிந்து பேசி நிச்சயமாக உங்களுடைய சம்பள விகிதங்களை மாற்றம் கொண்டு வந்தும் மற்ற கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலித்து, அவற்றையெல்லாம் கிடைக்கும்படியும் செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் உறுதிமொழி அளித்து வந்ததாகவும் சொல்கிறார்கள். அதற்குப் பின்னர் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலே போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, பாரஸ்டர்களின் அந்த நியாயமான கோரிக்கைகளை அரசு பரிவோடு பரிசீலித்து நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

10 15 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் போன ஆண்டு வைகை அணைப்பகுதியில் இருக்கக்கூடிய கல்லூரியிலே பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். மாநிலம் முழுவதுமாக உள்ள ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் ஆகியோர் அங்கே கூடி—நான் மாலையிலே 5 மணி அளவிலே அங்கே சென்றேன்—அதாவது காலை 10.00 மணியில் இருந்து எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் போராட்டம் நடத்தினார்கள். எங்களுக்கு சம்பள உயர்வு தந்தால்தான் விழாவை நடத்தவிடுவோம் என்ற அளவில் போராடினார்கள். அவர்கள் அரசு ஊழியர்கள். அமைச்சர் அங்கே அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் காலையிலிருந்து அங்கே போராட்டம்; வனத்துறைத் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் ஏறத்தாழ 6 மணி நேரம் பேசிப் பார்த்தார்கள். அவர்கள் கேட்கவில்லை. நான் சென்ற உடனே எனக்குத் தகவல் கொடுத்தார்கள். நான் சொன்னேன், வேண்டுமென்றால் பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்கிறேன், அவர்கள் விரும்பாவிட்டால் நான் சென்னைக்குத் திரும்பி விடுகிறேன் என்று சொன்னபிறகுதான் ஓரளவுக்கு விழாவை நடத்துவதற்கு சம்மதித்தார்கள். நான் அந்த விழாவில் சொன்னேன், உங்களுடைய கோரிக்கைகளை, அதாவது ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் ஆகியோருடைய கோரிக்கைகளை ஏற்கெனவே நான் முதலமைச்சரிடம் எடுத்துக் கூறி இருக்கிறேன், அது ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அதற்கிடையில் இப்படி பட்டமளிப்பு விழாவில் அனைவரும்

1990 மே 12] [திரு. கே. பி. கந்தசாமி]

சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டால் என்னால் இந்த நேரத்தில் எந்தவிதமான காரியத்தையும் செய்ய முடியாது, உறுதிமொழி தர முடியாது என்று இறுதியாக நான் சொன்னேன். அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள், ஏற்கெனவே ஏனைய துறையில் உள்ள சில அதிகாரிகளுக்கு சம்பள உயர்வுகூடக் கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அது உறுதி செய்யப்படவில்லை என்று நான் சொன்னேன். அப்படி வேறு இலாக்காவில் கொடுக்கப்பட்டிருந்தால் கூட நான் அந்த உறுதிமொழி அளிக்க முடியாது ; நான் நிதித்துறை அமைச்சர் அல்ல ; நிதித்துறை அமைச்சராக இல்லாதிருக்கும்போது எப்படி அந்த உறுதிமொழிகளை நான் அங்கே கொடுக்க முடியும்? எனவே நான் சொன்னதெல்லாம், முதலமைச்சரிடம் உங்களுக்காக சிபாரிசு செய்வேன், பரிந்துரை செய்வேன் என்ற அளவில் சொல்லிவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு சென்னை வந்தவுடன் மறுநாளே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் ஆகியோரது கோரிக்கைகள் சற்று நியாயமானவை, ஆகவே இவைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்குப் பிறகுதான் ரேஞ்சர்களுடைய ஊதியம் உயர்த்தித் தரப்பட்டது. இன்னும் பாரஸ்டர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரக் கூடாது, தர முடியாது என்று அறிவிப்பு வரவில்லை. அது ஆய்வில் இருக்கிறது. அதற்குள்ளாகவே அவர்கள் அங்கே பாரஸ்டில் இருக்கக்கூடிய கல்லூரியில் உண்ணாவிரதம் ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்கள் அறிவிப்புக் கொடுத்தது, தொடர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக.ஆறு அம்சக் கோரிக்கையைக் கொடுத்து அந்தக் கோரிக்கையை ஏற்கும் வரையில் தொடர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு சாகும் வரை உண்ணாவிரதம் என்று இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே கொடுத்த அறிவிப்பு ஒன்று. அங்கே நடைபெற்றுக்கொண்டு இருப்பது இன்னொன்று. அதுபோல் இங்கேயும் அதாவது சென்னையிலே அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தின் மூலமாக இந்த உண்ணாவிரதம் நடைபெறவில்லை. அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திலே இருந்து பிரிந்து சென்றவர்கள் சிலர் இப்படிப்பட்ட உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இன்னும் ஆய்வில் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை மீது அரசு அலுவலர்கள் இப்படிப்பட்ட உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்காது இருந்தால் இங்கே அதற்குள்ளாக ஏதாவது ஒரு அறிவிப்பு வந்திருக்கக்கூடும். இருந்தாலும் கூட அரசு ஊழியர்கள் என்ற முறையில் அவர்களுடைய கோரிக்கைகளை பரிவோடு முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[1990 மே 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தொடர்பாக திரு. சிங்காரம் அவர்களும் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர் பெயரும் இதிலே இணைக்கப்படுகிறது. அதுபோல் நம்முடைய திரு. பொன். விஜயராகவன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்களும் இணைக்கப்படுகின்றன.

(இ) சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை கோரும் டி.வி.எஸ் தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் நிறுவனங்களான டி.வி.எஸ். நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் அவர்கள் விரும்பக்கூடிய முறையில் சங்கம் அமைத்துக்கொள்ள மறுக்கின்ற அந்த டி.வி.எஸ். நிர்வாகத்தின் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மே மாதம் ஒன்றாம் தேதி முதல் அந்தத் தொழிலாளர்கள் பனகல் பார்க்கிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்படி உண்ணாவிரதம் இருந்து வந்த தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு 10-ஆம் தேதி அன்று காங்கிரஸ்காரர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய இடம் அது என்று சொல்லி அவர்களை உண்ணாவிரதம் இருக்கவிடாமல் தடுத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக அவர்கள் நேற்று ஊர்வலமாக வந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் தமிழகத்தில் மிகப் பெரிய தொழில் நிறுவனம்.

10.20 மணி

அதிலே நியாயமாக தாங்கள் விரும்பிய ஒரு சங்கத்தை அமைக்கக் கூடாது என்று தொடர்ந்து அவர்கள் அந்தத் தொழிலாளர்கள் மீது மிகப் பெரிய அளவுக்குப் பழி வாங்க பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அவர்களை மாநிலம் விட்டு மாநிலம் மாற்றுவது, வேலையை விட்டு நீக்குவது போன்ற நிர்பந்தங்களைச் செய்கிறார்கள். அரசு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். இரகசிய ஓட்டளிப்பு முறையிலே அவர்கள் விரும்பும் சங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஏற்பாட்டுக்கு வழி வகுத்துள்ளார்களா, அதற்குரிய பாதுகாப்பு அளிப்பார்களா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.